# இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

## விருந்தினர் விடுதி பராமரிப்பாளர் மற்றும் சமயல்காரர் (ஒப்பந்த அடிப்படையில்) பதவி வெற்றிடம்

இப் பல்கலைக்கழகத்தில் வெற்றிடமாகக் காணப்படும் விருந்தினர் விடுதி பராமரிப்பாளர் மற்றும் சமயல்காரர் (ஒப்பந்த அடிப்படையில்) பதவிக்காக உரிய தகைமைகளை கொண்டிருப்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்:**

(i) க.பொ.த (சா.த) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாதவாறு 04 பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருக்க வேண்டியதுடன் 06 பாடங்களில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.

அல்லது

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழிநுட்ப/தொழிற்கல்வி பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்படும் சமயல்காரர் / அறை பராமரிப்பாளர் போன்ற துறைகளில் NVQ- 03 மட்டத்திலான தேசிய சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும்.

(ii) விருந்தினர் விடுதிகளின் தளபாடங்கள், பீங்கான்கள், சாப்பாட்டு மேசை உபகரணங்கள், துணிகள் போன்றவற்றைப் பாதுகாத்தல் மற்றும் பாராமரித்தல், விருந்தினர் விடுதி வளாகத்தை பராமரித்தல் மற்றும் உணவு சமைப்பது தொடர்பாக அறிவைப் பெற்றிருக்க வேண்டியதுடன் பொருட்கள் மதிப்பீட்டு ஆவணத்தையும் பேணக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

(iii) சொல்லப்படுகின்ற எண்ணிக்கையினருக்கு கீழைத்தேய மற்றும் மேலைத்தேய உணவுகள் சமைத்தல் மற்றும் பரிமாறுதல் தொடர்பான அறிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**சம்பளம்** : ரூபா. 48,000.00 (சகல சலுகைகளும் உள்ளடங்கலாக)

**வயது** : 55 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் கூடாது.

**நன்மைகள்** : தேர்ந்தெடுக்கப்படுபவர் ஊழியர் சேமலாப நிதியத்தின் அங்கத்தவர் ஆவதுடன் அவருடைய நிலையான மாதாந்த கொடுப்பனவில் 8% அளவில் மற்றும் இலங்கை திறந்த பல்கலைக்கழகம் மூலம் 12% அளவில் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்பு செய்யப்படும். அதற்கு மேலதிகமாக அவர்களுடைய மாதாந்த நிலையான சேமிப்பில் இருந்து 3% அளவில் இலங்கை திறந்த பல்கலைக்கழகம் மூலம் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்பு செய்யப்படும்.

**விண்ணப்பிக்க வேண்டிய முறை:**

தங்களால் தயாரிக்கப்பட்ட கல்வித் தகைமைகள் மற்றும் உரிய துறையிலான அனுபவம் தொடர்பான தகவல்கள் அடங்கிய சுயவிபரக்கோவை ஒன்றை சான்றிதழ்களின் பிரதிகளுடன் சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ கல்விசாரா தாபனப் பிரிவு, இலங்கை திறந்த பல்கலைக்கழகம், நாவல, நுகேகொட எனும் முகவரிக்கு 2024.12.03 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும் அல்லது நேரடியாக வருகை தந்து ஒப்படைக்க முடியும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவிப் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். 2024.12.03 ஆம் திகதிக்கு முன்னர் பல்கலைக்கழகத்திற்கு சான்றிதழ்களின் பிரதிகளுடன் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களை மாத்திரமே நேர்முகப்பரீட்சைக்கு அழைப்பதற்காக கருத்திற் கொள்ளப்படும்.

**கவனிக்க வேண்டியவை**: இவ் வெற்றிடங்கள் காணப்படுவது கீழ்வரும் பிராந்திய/கற்கை நிலையங்களில் மாத்திரமே ஆகும்.

- நாவல மத்திய வளாகம்
- கண்டி பிராந்திய நிலையம்
- யாழ்ப்பாண பிராந்திய நிலையம்
- கிளிநொச்சி கற்கை நிலையம்

பதிவாளர்
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
நாவல, நுகேகொட.
2024.11.20